செ.வெ.எண்.05 நாள்: 01.09.2017

**திருநெல்வேலி மாவட்டம் நெல்கட்டும்செவலில் விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.**

திருநெல்வேலி மாவட்டம், நெல்கட்டும்செவலில் விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்தநாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாக கொண்டாடிட தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில், இன்று (01.09.2017) நெல்கட்டும்செவலில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல் சுதந்திர போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் நினைவை போற்றும் வகையில் அரசு விழாவாக அறிவித்தமைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் விழா சிறப்பாக நடைபெறுகிறது. அரசின் சார்பில் நாங்கள் அனைவரும் இங்கு வந்திருந்து வீரம்செறிந்த மண்ணில் மரியாதை செலுத்தியுள்ளோம். சுதந்திர போராட்டத்தில் மாவீரன் பூலித்தேவன் அவர்களின் பெரும்பங்கு என்பதை நாடு பாராட்டி வருகிறது. இந்த உலகம் உள்ளவரை விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு திரு.மனோகரன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.மாணிக்கம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் (தென்காசி) திரு.இராஜேந்திரன், (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஜெகவீரபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.K.P.முனிசாமி, திரு.மனோஜ்பாண்டியன், திரு.சுப்பையாபாண்டியன், திருமதி.முத்துலெட்சுமி, மாநில விற்பனைக்குழு துணை தலைவர் திரு.தச்சை கணேச ராஜா, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி பேரங்காடி தலைவர் பல்லிக்கோட்டை திரு.செல்லத்துரை, நெசவாளர் சங்கத்தலைவர் திரு.ஆறுமுகம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் திருமதி. சுதா கே.பரமசிவம், திரு.ஏ.கே.சீனிவாசன், திரு.முத்துராமலிங்கம், திரு. பூவரசன் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**